7.	இராமநாதபுரம்	2,347	ஏக்கர்கள்.
8.	திருநெல்வேலி	2,769	”
9.	கோயம்புத்தூர்	5,884	”
10.	மதுரை	3,490	”
11.	கன்னியாகுமரி	51	”
12.	நீலகிரி	56	”
		23,210	ஏக்கர்கள்.

(இ) 1958-ம் ஆண்டு இயற்றப்பட்ட தமிழ்நாடு பூதான் யக்ஞ சட்டத்திற்குட்பட்டு அவைகள் விநியோகம் செய்யப் பட்டுள்ளன.

திரு. எம். சுரேந்திரன் : இங்கே சொல்லப்பட்டிருக்கிற நிலங் களுடைய நிர்வாகம் எப்படி இருக்கிறது? அந்த நிலத்தை வைத்திருக்கிறவர்கள் தங்களுடைய தேவையைப் பூர்த்தி செய் கின்ற வகையில் இதர தொழில்களையும், காரியங்களையும் சரிவரச் செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

பாரத் சேவக் சமாஜத்திற்கு மானியம்

* 692 வினா—**திரு. ஜி. ராமசாமி** : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அமைந்துள்ள பாரத் சேவக் சமாஜ், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாணவர் சமூகப்பணி மன்றம் இவைகளுக்கு அரசு மானியம் ஏதேனும் வழங்கி வருகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1974 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:

(அ) & (இ) பாரத் சேவக் சமாஜத்திற்கு 1959—60 முதல் 1967—68 ஆம் ஆண்டு வரையில் கீழ்க்கண்ட தொகைகள் மானியமாக வழங்கப்பட்டன :—

ஆண்டு.		தொகை.
		ரூ.
1959-60	(மூன்று திங்களுக்கு)	6,525
1960-61		23,050
1961-62		
1962-63		17,700
1963-64		7,500
1964-65		6,000
1965-66		3,000
1966-67		6,000
1967-68		3,000

1968 ஆம் ஆண்டிலிருந்து பாரத் சேவக் சமாஜத்திற்கும் அதனுடன் இணைந்த மாணவர்கள் சமூக சேவை நிறுவனத்திற்கும் மாநில அரசு மானியம் எதுவும் வழங்கவில்லை.

திரு. எம். சுரேந்திரன்: பாரத் சேவக் சமாஜ நம் மாநிலத்தில் எந்தெந்த மாதிரியான பணிகளைச் செய்துகொண்டிருக்கிறது? 1967—68-க்குப் பிறகு அந்த சமாஜத்திற்குப் பணம் கொடுக்கப்பட்ட விவரம் இல்லையே. அது இயங்கவில்லையா? இயங்குகிறது என்றால் பணம் தராமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பாரத் சேவக் சமாஜ் தனது பணிகளைச் சட்டத்திற்கு ஏற்ற அளவில் நடத்தவில்லை. ஆதலால் அவர்கள் அந்த ஆண்டில் இருந்து தங்களுக்குப் பணத்தை ஒதுக்கித் தருமாறு கேட்கவில்லை. அவர்கள் வேலை ஸ்தம்பித்திருக்கிறது. அதனால் கொடுக்கிற பணம் ரத்து செய்யப்பட்டது.